பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 20 திங்கட்கிழமை (03-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 68

# ஐந்து அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## எதிர்க்கட்சிகள் முஸ்தீபு

கொழும்பு, பெப்ரவரி 3

ஜனாதிபதி பிரேமதாஸாவின் அரசில் அங்கம் வகிக்கும் ஐந்து முக்கிய அமைச்சர்களுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சிகள் முஸ்தீபு செய்திருக்கின்றன. விரைவில் இப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கள வார இதழ் ஒன்று நேற்று இத்தகவலை வெளியிட்டது.

எந்தெந்த அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்பதையும்—

அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் விவரத்தையும் இறுதி நேரம் வரை இரகசியமாக வைத்திருப்பதற்கு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பாரிஸ் மாநாட்டில்

## கூடுதலான நிதி உதவி ஸ்ரீலங்காவுக்கு கிடைக்கும்?

பாரிஸ், பெப். 3

இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு இவ்வருடம் ஸ்ரீலங்கா அரசு எதிர்பார்ப்பதை விட கூடுதலான நிதி உதவியை வழங்கக்கூடும். இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவுடன் நெருங்கிய வட்டாரங்கள் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்திருக்கின்றன.

எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டில் 80 கோடி டொலர்கள் [3,600 கோடி ரூபா] தருமாறு ஸ்ரீலங்கா அரசு விடுத்த விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரஸ்தாப மாநாடு நடப்பதையொட்டி ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றியே அதிகம் பேச்சடிபடுகிறது.

குறிப்பாக ஐரோப்பிய சமூக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



அப்ப...... கிடைக்கிற நிதியிலை ஆயுதங்களை வாங்கிக் குவிக்க வேண்டியதுதானே...!

# இராணுவ காவல் அரண் தச்சன்காட்டில் தகர்ப்பு!

## படையினர் இருவர் பலி! ஆயுதங்கள் மீட்பு!!

யாழ்ப்பாணம், பெப். 3

மாவிட்டபுரம் பகுதியிலுள்ள தச்சன்காடு இராணுவ காவலரண் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் தகர்க்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் புலிகள் நடத்திய இந்தத் திடீர்த் தாக்குதலின்போது அப்பகுதி எங்கும் அதிர்ந்தது. வேட்டுச் சத்தங்கள் முழங்கின. அயல் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பதற்றமும் பீதியும் அடைந்தனர்.

தச்சன்காடு தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் பின்வரும் ஆயுத உபகரணங்களைக் கைப்பற்றினர்:-

- ★ ரி 56 ரகத் துப்பாக்கி —1
- ★ ரி 56 ரவைக் கூடுகள் —2
- ★ ஏ. கே. எல். எம். ஜி. ரவைக் கூடுகள் —3
- ★ தொடர் ரவைகள் —300
- ★ ஏ. கே. ரவைகள் — 950
- ★ ஜே. ஆர். ரக கிரனேட்டுகள் —4
- ★ புகைக் குண்டுகள் —2
- ★ தொலைத் தொடர்பு கருவி — 1

[ஒ-68-165]

# அரசாங்கப் படைகளுக்கு ஆயுதங்கள் பற்றாக்குறை?

கொழும்பு, பெப். 3

ஆயுதப் பற்றாக்குறை, கையிருப்பில் உள்ள ஆயுதங்களும் உரியமுறையில் பாவிக்க முடியாதவையாக இருக்கும் நிலை ஆகிய இரு முக்கிய பிரச்சினைகளை ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் எதிர்நோக்கியுள்ளனராம்.

இவற்றின் காரணமாக வடக்கு-கிழக்கில் அரச படைகள் போரைத் திறமையாக நடத்த முடியாத நிலையும், வெற்றி பெற முடியாத கட்டமும் எழக்கூடும் என்று—

பத்திரிகைச் செய்தி ஒன்றை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றுக் கருத்து வெளியிட்டது.

மனித உரிமை மீறலில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டி மேற்கத்திய நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதைத் தடை செய்திருப்பது ஸ்ரீலங்கா ஆயுதப் படையினருக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக சொல்லப்பட்டது.

ஹங்கேரி, சீனா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட டாங்கிகள், விசைப் படகுகள் முதலியன

[6 ஆம் பக்கம் பார்க்க]

# ஆஸ்பத்திரி மல சல கழிவு நாளை முதல் பண்ணைக்கு!

## தற்காலிக ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்ப்பாண நகரத்தின் சுகாதாரத்துக்குப் பெருங்கேடு விளைவித்து வந்த யாழ் ஆஸ்பத்திரி மலசல கழிவுத் தேக்கப் பிரச்சினைக்கு நாளை செவ்வாய்க்கிழமை தற்காலிக முடிவு காணப்படுகிறது.

சமீப காலமாக ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள திறந்த வாய்க்காலிலேயே மலசல கழிவு தேங்கவிடப்பட்டு வந்தது.

முன்னர் நீண்ட காலமாக பண்ணைக் கடலுக்குள்ளேயே இக்கழிவு பாய்ச்சப்பட்டு வந்தது. ஆனால் அண்மைக்காலமாக யுத்த நிலைமை, தொழில் நுட்பக் கோளாறு மற்றும் வசதியின்மைகளால் ஆஸ்பத்திரிக்கு அருகில் விக்ரோறியா வீதிப் பக்கமாக உள்ள வாய்க்காலில் கழிவு தேங்க விடப்பட்டு வந்தது.

இது குறித்து உதயன் கடந்த 1-12-91 இல் ''யாழ் நகர மக்களின் சுகநலனைக் கெடுக்கும் போதனா ஆஸ்பத்திரி; மலசல கழிவுகள் திறந்த [illegible] தலைப்பில் செய்தி ஒன்றை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# வடக்கில் தாக்குதலை ஆரம்பிக்க உத்தரவு?

கொழும்பு, பெப். 3

வடக்கில் இராணுவ நடவடிக்கையைத் தொடங்குமாறு இராணுவத் தலைமைப் பீடம் வடபகுதித் தளபதிக்கு அறிவுறுத்தல் வழங்கிவிட்டதாக ''திவயின'' ஞாயிறு பத்திரிகையில் நேற்றுச்செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இதேவேளை கடந்த மாதத்தில் புலிகள் கிழக்கில் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல்களால் இராணுவ மோதல்கள் அதிகரித்துவிட்டதாகவும்—

வடக்கில் மிக விரைவில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படலாம் எனவும் ஆஸ்திரேலிய வானொலி தெரிவித்தது.

[அ-10-3]

# நாளை மறுதினம் பல பேரணிகள்!

யாழ்ப்பாணம், பெப். 3

நாளை மறுதினம் யாழ். செயலகம் முன்பாக நடைபெறவுள்ள வெகுஜனப் போராட்டத்தை ஒட்டி அன்று காலை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பேரணிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

வெகுஜனப் போராட்ட ஏற்பாடுகள் குறித்து நேற்று விரிவாக ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி—

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்கள் அன்று காலை 8 மணிக்கு செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடுவர்.

வலிகாமம் மேற்கு மற்றும் சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, உடுவில் உதவி அரச அதிபர் பிரிவுகள் ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள் கொக்குவில் இந்துக் கல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கனடா மனித உரிமை குழு ஈழ ஆதரவாளருடன் பேச்சு

கொழும்பு, பெப். 3

கனடாவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த மனித உரிமைகள் குழு, இலங்கைக்கு வரமுன் கனடாவில் வைத்து ஈழ ஆதரவாளர் அணியைச் சந்தித்துப் பேசியதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள நிலைமையை நேரில் வந்து கண்டறிவதற்கு முன்னர்—

கனடா பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினர்கள் 9 பேரும் ஒன்ராறியா நகரில் வைத்து ஈழ ஆதரவாளர்களைச் சந்தித்து விரிவாகப் பேசிய பின்னரே, இங்கு புறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமஷ்டி முறையில் தீர்வு; வலியுறுத்துகிறார் தூதர் ஜா

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு சமஷ்டி மூலம் தீர்வு காண்பதற்கு ஸ்ரீலங்கா மக்கள் முயலவேண்டும்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் என். என். ஜா கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

சமஷ்டியில் இடம்பெறும் பல முக்கிய அம்சங்கள் சமஷ்டி என்று குறிப்பிடாம

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா.வுக்கு தனியான படை: மாநாட்டில் பெரும் ஆதரவு

நியூயோர்க், பெப். 3

ஐ. நா.வுக்கு தனியான ஒரு படை நிறுவ வேண்டும். என்ற யோசனைக்கு கடந்த வெள்ளிக்கிழமை நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ. நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளின் ஒரு நாள் உச்சி மாநாட்டில் பெரும் ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

ஐ. நா.வுக்கு தனியான ஒரு படை நிறுவப்படவேண்டும் என்று பிரெஞ்சு அதிபர் மித்தரண்ட் உச்சி மாநாட்டில் யோசனை தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும், ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினும் பிரெஞ்சு அதிபரின் யோசனைக்கு பெரும் ஆதரவு தெரிவித்தனர்.

சமாதானத்துக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைச் சமாளிக்கவும், ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும் கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் வலியுறுத்தினர்.

ஐ. நா.வை வலுப்படுத்துவது, அதன் அமைதிகாக்கும் பணிகளை மேம்படுத்துவது ஆகியவை குறித்து ஐ. நா. பொதுச் செயலாளர் தமது பரிந்துரைகளை 5 மாத காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். [த-இ]

# நேர்முகப் பரீட்சைகள்

மானிப்பாய், பெப் 3

மருதனார் மடக் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில், கல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவுடன் ஆசிரியர் சேவையில் அமர்த்தப்பட உள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை செவ்வாய்க்கிழமை பின்வரும் இடங்களில் நடைபெறும்.

உரும்பராய் இந்துக்கல்லூரி — காலை 9மணி - உரும்பராய் கொத்தணி, பிற்பகல் 1 மணி - வயாவிளான் கொத்தணி.

மானிப்பாய் இந்துக்கல்லூரி—காலை 9மணி - மானிப்பாய் கொத்தணி, பிற்பகல் 1 மணி - நவாலி கொத்தணி.

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி — காலை 9 மணி - கோப்பாய் கொத்தணி, பிற்பகல் 1 மணி - நீர்வேலிக் கொத்தணி.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி — காலை 9 மணி - சுன்னாகம் கொத்தணி, பிற்பகல் 1மணி - ஏழாலை கொத்தணி.

புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி — காலை 9 மணி - புத்தூர் கொத்தணி, பிற்பகல் 1 மணி - அச்சுவேலி கொத்தணி.

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி — காலை 9 மணி முதல் 4 மணி வரை உடுவில் கொத்தணி.

[த-90]


## மாபெரும் வெகுஜனப் போராட்டம்

## 05-02-1992

**தமிழீழ மக்களே!**

எம் மண்ணை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தையும், இராணுவ நடவடிக்கைகளையும், பொருளாதார அழுத்தங்கள், விலைவாசிகளின் ஏற்றங்கள், மாணவர்களின் கல்விப் பாதிப்புக்கள், சுகாதார பாதிப்புக்கள், குழந்தைகளின் போஷாக்கின்மை, கடற்றொழில்-விவசாய பாதிப்புக்கள், ஏழைத் தொழிலாளிகளின் வேலை இழப்புக்கள் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 5-2-92 புதன்கிழமை நடைபெறவிருக்கின்ற **மாபெரும் வெகுஜன மறியற் போராட்டத்திற்கு** மக்களை அணிதிரளும்படி வேண்டுகின்றோம்.

**இம்மறியற் போராட்டம் யாழ். மாவட்டச் செயலகப் பணிமனையில் காலை ஆரம்பமாகும்.**

**பாஷையூர் புனித அந்தோனியார்**

**சமூக அபிவிருத்தி அமைப்பு**

பாஷையூர். [19579]


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
**16 - 12 - 1942**

உதிர்வு:
**16 - 01 - 1991**

**அமரர் சரோஜினிதேவி கிருஷ்ணசாமி**

எங்கள் குடும்பத் தலைவியின் ஓராண்டு திவசம் 04-02-1992 (செவ்வாய்க்கிழமை) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்களை அதில் கலந்து மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
கணவர்:-த. கிருஷ்ணசாமி,
பிள்ளைகள்.

854, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (19574)

# இன்று

யாழ்ப்பாணம், பெப். 3

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த அரசுசார்பு, அரசுசார்பற்ற ஊழியர்கள் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். இந்துக் கல்லூரி ஜி. சீ. ஈ. [உயர்தரம்] 91 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது. [ஒ]

## பிரதி பணிப்பாளர்கள் நியமனம்

மானிப்பாய், பெப். 3

மருதனார்மடம், பண்டத்தரிப்பு கல்விக் கோட்டங்களுக்கு புதிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மருதனார்மடம் கோட்டத்துக்கு திரு. எஸ். சிவானந்தன், பண்டத்தரிப்பு கோட்டத்துக்கு திரு. எஸ். வி. மகேசவேலு ஆகியோர் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்பு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சண்முகராசா யாழ். கல்வி அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மருதனார்மட கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராக ஏற்கனவே கடமைபாற்றிய திரு. எஸ். தனஞ்செயன் ஓய்வு பெற்றுள்ளார். [ஒ-90]

## படையினர் சூடு; மீனவர் அச்சம்

யாழ்ப்பாணம், பெப். 3

மண்டைதீவு மற்றும் பூநகரி, கல்முனைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று மீனவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதனால் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் திரும்பி வந்தனர்.

கடந்த நான்கு தினங்களாக இதே நிலைமையே தொடர்ந்தும் நீடிப்பதாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

## ஆரம்ப நீதிமன்றம் நளை திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 3

வடமராட்சிப் பிரிவுக்கான ஆரம்ப நீதிமன்றத் திறப்பு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு வதிரி, கரவெட்டியில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப நீதிமன்ற மண்டபத்தில் நடைபெறும். (உ)

## ஜப்பானில் பூமியதிர்ச்சி

மணிலா, பெப். 3

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்றுக் காலை பெரும் பூமியதிர்ச்சி ஒன்று ஏற்பட்டது.

கோலே குடாவில் மையம் கொண்டிருந்த இந்தப் பூமியதிர்ச்சி ரிச்டர் அளவையில் 5.7 ஆக இருந்தது.

பூமியதிர்ச்சியில் சிக்கி 32 பேர் காயமுற்றனர். பாதுகாப்பு இடங்களைத் தேடி ஓடும்போது விழுந்து கொண்டிருந்த பொருள்களினால் தாக்குண்டு பலர் காயமுற்றனர். (உ-10)

## பரந்தனை நோக்கி இரவில் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், பெப். 3

ஆனையிறவு முகாமிலிருந்து நேற்று முன்தினம் [சனி] இரவு பரந்தன் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சேதங்கள் குறித்து தெரிய வரவில்லை. (ஒ)

# 9 லட்சம் புத்தகங்கள் கப்பலில் வந்து சேர்ந்தன

பருத்தித்துறைக்கு நேற்று வந்த 'லில்லி' கப்பலில் தபால் பொதிகள், உணவுப் பொருள்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் போன்றவை எடுத்துவரப்பட்டன.

பொருள்கள் இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று வந்து சேர்ந்த முதலாவது புத்தகத் தொகுதியில் 250 மெற்றிக் தொன் நிறையுடைய — 9 லட்சம் பாடப் புத்தகங்கள் அடங்கி இருந்தன.

இவற்றில் முதலாம் ஆண்டு முதல் 5 ஆம் ஆண்டு வரையான வகுப்புகளுக்குரிய புத்தகங்களே உள்ளன.

இதேசமயம் —

பாடப்புத்தக விநியோகம் பெரும்பாலும் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-3]

# யாழ். கோட்டத்துக்கு 120 ஆசிரியர் நியமனம்

யாழ். கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு 120 தற்காலிக ஆசிரியர்கள் எதிர்வரும் 15 -ஆம் திகதி முதல் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒரு வார கால பயிற்சியும் வழங்கப்படவிருக்கிறது.

யாழ். கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழகத்தால் இந்த் நியமனம் வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-3]

**பருத்தித்துறை துறைமுக**

# 'பாஜ்'கள் திருத்தும் வேலை விரைவில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், பெப். 3

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கப் பயன்படுத்தப்பட்டு வரும் நான்கு மிதவைப் படகுகளும் ['பாஜ்'களும்] அடுத்தடுத்து திருத்தப்படவுள்ளன.

இந்த 'பாஜ்'களில் ஏற்பட்ட துவாரங்களைப் புனரமைக்கத் தேவையான 'ஒக்சிஜன்' சிலிண்டர்கள் நேற்று

[6 ஆம் பக்கம் பார்க்க]

# இந்தியாவுக்கு அமெரிக்கா 13 கோடி டொலர் உதவி!

இந்தியாவுக்கு 12 கோடி 70 லட்சம் டொலர் நிதி உதவியை அளிக்குமாறு அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு ஜனாதிபதி புஷ் சிபார்சு செய்திருக்கிறார்.

1993 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கான ஜனாதிபதி புஷ்ஷின் சிபார்சுகளில் இதுவும் ஒன்று என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொகையில் 2 கோடி 40 லட்சம் டொலர் அபிவிருத்தி உதவியாகவும்—

7 கோடி 70 லட்சம் டொலர் அவசர மனிதாபிமான மற்றும் போஷாக்கு உதவியாகவும்—

3 லட்சத்து 45 ஆயிரம் டொலர் இராணுவப் பயிற்சி உதவியாகவும் வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி புஷ் தனது சிபார்சில் கூறியிருக்கின்றார். (த-எ)

# அமெரிக்க ஆதரவு பெறவே இஸ்ரவேலுடன் உறவு?

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடு என்ற அந்தஸ்தைப் பெறுவதற்குத் தேவையான ஆதரவை அமெரிக்காவிடமிருந்து பெறும் நோக்குடன் தான், இஸ்ரவேலுடன் முழு அளவு இராஜதந்திர உறவை ஸ்தாபித்துக் கொள்வது என்ற முடிவை இந்தியா எடுத்திருப்பதாக ராஜீய வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அமெரிக்காவுடன் நெருக்கமான இராஜதந்திர உறவை வைத்துக்கொள்வதற்கு இஸ்ரவேல் விவகாரம் ஒரு முட்டுக்கட்டையாக இந்தியாவுக்கு இருந்து வந்தது.

வாஷிங்டனுக்கு முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னரே இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இஸ்ரவேல் விவகாரம் தொடர்பான கொள்கையில் முக்கிய தீர்மானத்தை எடுத்திருப்பது, அமெரிக்காவுடனான உறவை இறுக்கமாக்கிக் கொள்வது என்ற இந்தியாவின் நிலையை தெளிவாக எடுத்துக்காட்டியிருப்பதாகவும் ராஜீய வட்டாரங்கள் தெரிவித்தன. [த-எ]


## "உதயன்" வெற்றிக் கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய வி. க.

நடத்தும்

**7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையேயான**

## உதைபந்தாட்டப் போட்டி

★ ''நொக்கவுட்'' முறையில் நடத்தப்படும் இப் போட்டித் தொடருக்கு கழக அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ விண்ணப்ப முடிவு திகதி;- 10-02-1992.

★ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திரு. சொ. விஜயராஜா, போட்டிக்குழு பொறுப்பாளர், ஐயனார் வீதி, பருத்தித்துறை.

★ விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கையில் உள்ள உதயன் பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இப் போட்டித் தொடர் உதயன் ஆதரவுடன் நடத்தப்படுகின்றது.

பருத்தித்துறை ஐக்கிய வி. க.
01-02-1992.

**ஆ. புவனேந்திரம்**
செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் அகதி முகாமில் தீ விபத்து; மூன்று இலங்கைத்தமிழர் உயிரிழப்பு!

## தீவிரவாத இயக்கத்தின் கைவரிசை?

பொன், பெப். 3

ஜேர்மனியில் உள்ள அகதி முகாம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி மூன்று இலங்கைத் தமிழர்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

பிராங்க்பேர்ட்டில் இருந்து 40 மைல் தொலைவில் உள்ள லங்கெடன் என்ற இடத்தில் இருக்கும் அகதிமுகாம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை திடீரென்று தீப்பற்றிக் கொண்டது.

அப்போது அங்கு நித்திரையில் இருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் பதறியடித்துக்கொண்டு எழுந்தோடினர். இருந்தும் பலர் தீயினுள் சிக்கிக் கொண்டனர். அவர்களில் மூவர் உயிரிழந்தனர் என்று தெரிகின்றது.

எரிகாயங்களுடன் ஓர் அகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். 17 அகதிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

உயிரிழந்த மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளை வெளியேற்றக் கோரும் தீவிரவாத இயக்கம் செல்வாக்குடன் இயங்கும் இடம் பிராங்க்போர்ட் என்று அறிவிக்கப்படுகிறது.

[த-எ]

## ஹரியானாவில் 5பேர் சுட்டுக் கொலை

ஹரியானா மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் அம்மாநில முதலமைச்சரின் பிரதம உதவியாளரான என். எல். வர்மா, அவரது மனைவி, மகன், மெய்ப்பாதுகாவலர், மற்றும் கார்ச்சாரதி ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்கள் பயணம் செய்து கொண்டிருந்த காரை தீவிரவாதிகள் வழிமறித்துத் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. (த-10)

## ராஜீவ் கொலை விசாரணை:

## எதிராளிகள் பட்டியலில் "விக்கி"யும் சேர்க்கப்பட்டார்

சென்னை, பெப். 3

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான விக்கி எனப்படும் விக்கினேஸ்வரன் 21 ஆவது எதிரியாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்று அவ்வழக்கைப் புலனாய்வு செய்துவரும் விசேட பொலீஸ் குழு தெரிவித்துள்ளது.

விக்கி தற்போது ஈ. பி. ஆர். எல். எப் தலைவர் பத்மநாபா கொலை வழக்கு தொடர்பாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

ராஜீவ் காந்தி கொலையில் விக்கிக்குத் தொடர்பு உண்டு என்று காவலில் வைக்கப்பட்டிருக்கும் மற்றப் போராளிகள் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளதன் பேரிலேயே விக்கியும் எதிரியாக அறிவிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. [த-எ]

## தமிழ்மொழி அமுலாக்கல் இனி மாகாண சபைகளிடம்

### அமைச்சர் பெஸ்டஸ் தகவல்

கொழும்பு, பெப். 3

மத்திய அரசாங்கம்தான் தமிழ்மொழி அமுலாக்கலை உத்தியோக ரீதியாக அமுல் நடத்த வேண்டும் என்ற நிலையை மாற்றி அமைப்பது என்று அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

தமிழ்மொழி அமுலாக்கலை அந்த அந்த மாகாணசபையே தீவிரமாகச் செய்யவேண்டும் என்று அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்திருக்கிறார்.

தமிழ்மொழி அமுலாக்கலை மாகாணசபைகளிடம் விடுவது என்ற அமைச்சரவையின் முடிவை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மாகாண ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர்கள் மாகாணச் செயலாளர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா வெளியிட்டார்.

தமிழ்மொழி அமுலாக்கலில் இருந்து வந்த தடைகள் உடனடியாக அகற்றப்படவேண்டும் என்றும்—

தமிழ்மொழியை துரிதமாக, உத்தியோகபூர்வமாக அமுல் செய்யவேண்டிய நடவடிக்கைகளை மாகாண சபைகள் எடுக்கவேண்டும் என்றும் திரு. பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார். [த-எ]

## சிறைச்சாலை அத்தியட்சகரின் அனுமதி போதும்

தென்னிலங்கையில் உள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளைச் சந்திக்க அவர்களின் உறவினர்கள் அந்தந்தப் பகுதி சிறைச்சாலை அத்தியட்சகர்களின் அனுமதியுடனே சந்திக்க முடியும் என்று அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் திரு. எஸ். கே. ஜினதாஸா இதனைத் தெரிவித்தார். (த-எ)

## "ஹெல உறுமய"வின் முதல் கூட்டம் நாளை

கொழும்பு, பெப். 3

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரால் தொடங்கப்பட்டுள்ள 'தேசிய பாரம்பரியம்' (ஹெல உறுமய) என்ற இயக்கத்தின் முதலாவது பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பண்டாரகமவில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டாம் எனவும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்படியும் அரசை வற்புறுத்தும் தீர்மானங்கள் இக்கூட்டத்தில் கொண்டு வரப்பட இருப்பதாக இயக்கத்தின் அமைப்பாளர்களில் ஒருவரான திரு. திலக்கருணாரத்ன தெரிவித்தார்.

ஈழம் அமைக்கப்படுவதற்கு மலையகத்திலும் ஆதரவு உண்டு என்பதையே தொண்டமானின் யோசனைகள் வெளிப்படுத்துவதாகவும் அவர் கூறினார். [த-10]

## தோட்டங்கள் தேசியமயம்: 5 ஆயிரம் கோடி இழப்பு

### நிதி அமைச்சு செயலர் தகவல்

மலையகத்தில் பெரும் தோட்டங்களை தேசியமயமாக்கியதால் கடந்த இருபது ஆண்டுகளில் 4 ஆயிரம் கோடி ரூபாவில் இருந்து 5 ஆயிரம் கோடி ரூபாவரை நாட்டுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நிதி, திட்டமிடல், கொள்கை வகுத்தல் அமைச்சுச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் தெரிவித்தார்.

தேசியமயமாக்கலால் தோட்டத் தொழிற்றுறை மாதாந்தம் 40 கோடி ரூபாவை இழந்து வருகின்றது என்றும் அவர் சொன்னார்.

கொழும்பில் உள்ள தேசிய செய்திப் பத்திரிகைகளின் ஆசிரியர்களைத் தமது அலுவலகத்திற்கு அழைத்து அவர்களுக்கு இத்தகவல்களை திரு. பாஸ்கரலிங்கம் வெளியிட்டார். [த-எ]

## பிரபா, பொட்டம்மானைச் சரணடைய கோரும் உத்தரவு:

## இலங்கை தனது இந்தியத் தூதரிடம் விவரம் கேட்டுள்ளது

கொழும்பு, பெப். 3

விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் மற்றும் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் ஆகிய இருவரையும் சரணடையுமாறு சென்னை நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு பற்றி புதுடில்லியில் ஸ்ரீலங்காத் தூதரிடமிருந்து இலங்கை அரசு விவரங்களைக் கோரியுள்ளது.

வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்தினா இத்தகவலை வெளியிட்டார். கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரணடையக் கேட்கப்பட்டுள்ள திரு. பிரபாகரனை ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கம் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் வேண்டுகோள் எதனையும் விடுத்துள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்—

'இது வரை அப்படியான வேண்டுகோள் எதுவும் வெளிவரவில்லை. இந்த விஷயத்தை பத்திரிகைகள் மூலமாகத்தான் அறிந்தேன்'— என்று திரு. பேர்னாட் திலகரத்தினா பதிலளித்தார்.

அவ்வாறான வேண்டுகோள் விடுக்கப்பட்டால்...? அது குறித்து அரசாங்கம் கவனித்துக் கொள்ளும் என்றும் திரு. திலகரத்தினா பதிலளித்தார். இது பற்றி அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கேட்கப்பட்டது.

இந்த விஷயம் குறித்து வெளிவிவகார அமைச்சர் விடையைக் காண வேண்டும் என்று அவர் பதிலளித்தார். (அ-எ)

## மேலும் இருவர் பிணையில் விடுதலை

சென்னை, பெப். 3

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் [தடா] கீழ் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. ரி. மாரிமுத்துவையும், அவரது மகன் திரு. குமாரையும் பிணையில் விடுதலை செய்யும்படி ராஜீவ் காந்தி, பத்மநாபா கொலை வழக்கை விசாரித்து வரும் தனி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திரு. மாரிமுத்துவின் பிணை மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி திரு. எஸ். எம். சித்தீக் கடந்த வெள்ளி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

காவல் துறையினர் 'தடா' சட்டத்தின் கீழ் ஷரத்துக்களை தமது முதல் அறிக்கையில் சேர்த்திருக்க வேண்டும் என்றும்— காவல் துறையினர் அதற்குப் பின்னரும் அறிக்கை ஏதும் கொடுக்கவில்லை என்றும் — நீதிபதி தமது உத்தரவில் குறிப்பிட்டார்.

அவர்கள் இருவரும் முறையே 10 ஆயிரம் ரூபா பிணைப் பத்திரம் கொடுத்து அதே தொகைக்கு இரண்டு பேரின் பிணை உத்தரவாதமும் அளித்தால் அவர்களை விடுதலை செய்யலாம் என்று நீதிபதி உத்தரவிட்டார். [த]

## பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 3

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம், பயிலுனர்களின் வசதி கருதி யாழ்ப்பாணத்தில் நிரந்தர பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்றினை எதிர்வரும் 5 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பிக்கவுள்ளது. [த]

## தேசிய ரீதியில் கட்டுரைப் போட்டி: யாழ். மாணவர் மூவர் சாதனை!

யாழ்ப்பாணம், பெப். 3

சிறுவர் உரிமை சாசனம் பற்றி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் முதலாம், இரண்டாம் பரிசில்களைப் பெற்று சாதனை புரிந்துள்ளனர்.

யுனிசெப் நிறுவனமும், றெட்பார்னா நிறுவனமும் இணைந்து கல்வி உயர் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் பாடசாலைகளுக்கு இடையே அகில இலங்கை ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியிலேயே யாழ். மாணவர்கள் மூவர் வெற்றி பெற்றுள்ளனர்.

போட்டியின் 'பி' பிரிவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி வாசுகி தனபாலசிங்கம் முதலாம் பரிசையும், 'சி' பிரிவில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவன் இராஜதுரை ஸ்ரீதரன் முதலாம் பரிசையும், 'ஏ' பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சுமித்திரா இராமநாதன் இரண்டாம் பரிசையும் பெற்றிருக்கிறார்கள்.

கொழும்பு றோயல் கல்லூரியில் இடம்பெற உள்ள பரிசளிப்பு வைபவத்துக்கு சம்பந்தப்பட்ட மூவரும் அழைக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது. [த-5]

## ஐ. தே. க. யோசனையை சமர்ப்பிப்பது முக்கியமல்ல

### இப்படி சொல்கிறார் அமைச்சர் ரணில்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தனி யோசனை சமர்ப்பிப்பது முக்கியமல்ல.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசுக்கு அக்கறை இருக்கிறது. அதனால் தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைக்கு அரசும் உதவ முன்வந்திருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சுதந்திரக் கட்சியோ தனித்தனி யோசனை சமர்ப்பிப்பது முக்கியமல்ல; அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டைப் பெறுவதே முக்கியமானது.

இப்படி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா சொன்னார். [த-எ]

## 18 பேர் தெரிவு

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் நடைபெற்ற, அமைய சுகாதாரச் சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் 18 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில்7 பேர் ஆண்கள், 11 பேர்பெண்கள். [த- 15]

## 86 ரயில்வே சரக்குப் பெட்டிகள் கைவிடப்பட்டன

கொழும்பு, பெப். 3

இலங்கை அரசினால் ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 86 ரயில்வே சரக்குப் பெட்டிகள்[Waggons] பாவனைக்கு உகந்தவை அல்ல என்ற காரணத்துக்காக கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஒவ்வொன்றும் 6 லட்சம் ரூபா பெறுமதியான இந்த ரயில் பெட்டிகள் சில வருடங்களுக்கு முன் இறக்குமதி செய்யப்பட்டன என்றும் —

தரம் குறைந்த இவற்றை இங்கு வைத்து திருத்தும் [illegible] பலனளிக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. [த-10]

## குப்பி விளக்கு விபத்து

யாழ்ப்பாணம்: பெப். 3

தலைமாட்டில் வைத்திருந்த குப்பிவிளக்கு, தட்டுப்பட்டு தீப்பற்றியதால் படுக்கையில் இருந்த ஒருவர் தலை எங்கும் தீக்காயங்களுக்குள்ளானார்.

உடுவில் மல்வம் என்ற இடத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. ஆள்வான் இரத்தினம் (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார். [த-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். திருமணம் முடிவுறு மட்டும் நின்று உதவியளிக்கும் உகந்த ஸ்தாபனம்; மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [19543]

## G. C.E. A/L, O/L

கடந்தகால பரீட்சை வினா விடைப்புத்தகங்கள் விற்பனையாகின்றன. கணக்கியல் வர்த்தகம், கணக்கியலும் வர்த்தகமும் விவரங்களுக்கு: 374, அறிவகம், வெலிங்டன் சந்திக்கு அருகாமை யாழ்ப்பாணம். [சி/1465]

## சமூகக்கல்வி (ஆண்டு 10)

சமூகக்கல்வி குறிப்புகள் [ஆண்டு 10] வினா - விடைகள் (திருத்திய இரண்டாம் பதிப்பு) விற்பனையாகின்றது. O/L பரீட்சைக்கு ஏற்றது. புத்தகசாலைகளில் பெறலாம். ஆக்கம்: நா. மயில்வாகனம், சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். [16571]

## பரீட்சை வழிகாட்டி O/L

சமூகக்கல்வி, வரலாறு பரீட்சை வழிகாட்டி விற்பனையாகிறது. பகுதி I, II பல்தேர்வு அமைப்பு வினாக்கள், வெற்றிடங்கள் நிரப்புதலுக்கு உரியது. வினா-விடைகளாக அமைந்துள்ளது. விலை ரூபா 21/-. ஆக்கம்: நா. மயில்வாகனம். [16572]

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? காரியம் கைகூடுமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய பதில் உடன் கிடைக்கும். ஜாதகம், குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [19546]

## சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (5025)

## C.C.A.

யாழ்ப்பாணம்.

**A/L - 92**

**Day Classes**

வர்த்தகம் – 8-9, 11-12
பொருளியல் — 9-11
கணக்கியல் — 12-2
தமிழ் — 12-1
இ.நாகரிகம் — 1-2

குறிப்பு:

★ முழுப்பாடத் திட்டமும் பூர்த்தி செய்யப்படும்,
★ வினாவிடை வகுப்புகள் நடைபெறுகின்றன.
★ ''சந்தை சமநிலை'' [4-2-92] ஆரம்பம்

''மேலதிக நேரமும் போடப்படும்''

[சி/1457]

## தேவை

குழந்தைப் பிள்ளைத் தொட்டில் தேவை. தொட்டில் மரம், விலை விவரத்துடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்க. 382, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [19562]

## வானொலி நாடகம்

'இன்று தமிழில் வானொலி நாடகம் எழுதுபவர்களில் தலை சிறந்தவர்' என்று விமர்சகர் K. S. சிவகுமாரனால் பாராட்டப்பட்ட அராலியூர் சுந்தரம்பிள்ளையின் கெட்டிக்காரர்கள் 25/-. முதலாம்பிள்ளை 30/-. 19 வானொலி நாடகங்கள். [19482]

# சகலருக்குமான அறிவித்தல்

## 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 46 (1) ன் கீழான விசாரணை

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செல்லையா லிங்கநாதன் அவர்களால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செல்லத்துரை கனகசபாபதி கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர், யாழ்ப்பாணம் ஆகிய நான் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் அமைப்பு, தொழிற்பாடு, நிதிநிலைத் தொடர்பில் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 46 (1) ன் கீழான விசாரணை ஒன்றை 1992 – 02 – 05 ஆம் திகதி காலை 10.00 மணி தொடக்கம் நடத்தவுள்ளேன்.

இச் சங்கத்தின் எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி அல்லது இச் சங்கத்தின் அலுவல்களின் முகாமை பற்றி ஏதேனும் தகவல் தர விரும்பும் எவரும் 1992 - 02 - 25 ஆம் திகதிக்கு முன்னர் இச்சங்க தலைமை அலுவலகத்தில் நேரில் வந்து எழுத்து மூலமோ அல்லது வாய்மூலமோ எனக்கு அறியத் தரும்படி தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

செ கனகசபாபதி,
விசாரணை உத்தியோகத்தர்.

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
29 – 01 – 1992. [சி-1381]

# வெளிவந்துள்ளது!

**Tamil Institute of Strategic Studies**
**Uduvil**

இனால் வெளியிடப்படும்

**பூகோள அரசியல் - இராணுவ தந்திரோபாய ஆய்வு நூல்.**

நூலின் தலைப்பு:

## "நியூக்கிளியர் ஆயுதங்கள் தொடர்பான அமெரிக்க புதிய கொள்கைத் திட்டங்களும் எதிர்கால உலகமும் நாமும்"

இன்றைய நவீன உலகில் பூகோள அரசியல் போக்கினைச் சரியாக ஆராய்ந்தறியாவிடின் ஒரு சமூகமோ அல்லது ஒரு நாடோ முன்னேற்றத்தினைத் தொடர்ச்சியாக ஏற்படுத்த முடியாது.

விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் போராடி வரும் இலங்கைத் தமிழர்கள் இன்றைய, எதிர்காலப் பூகோள அரசியல் போக்கினைச் சரியாக ஆராய்ந்தறிந்து, தமது அரசியல், பொருளாதார, சமூகத் திட்டங்களையும், அரசியல் - இராணுவத் தந்திரோபாயங்களையும் தகுந்தபடி வகுத்துச் செயற்பட வேண்டியுள்ளது.

இந்த ஆய்வு நூல் இவற்றினை, இயலுமான வரை, எளிமையாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும் உங்களுக்குத் தருகிறது. சாதாரண பொதுமக்கள் பூகோள அரசியல் போக்கினை ஆராய இந்த ஆய்வு நூல் உதவும்.

*Tamil Institute of Strategic Studies*
Uduvil

31 ஜனவரி, 1992 [சி-1376]

# யுத்தம் தொடர்ந்தால் மக்கள் நடைப்பிணமாவர்!

## இப்படி எச்சரிக்கிறார் சந்திரிகா

வடக்கு - கிழக்கு யுத்தம் ஆண்டுக்கணக்காக தொடருமானால் மக்கள் உணவின்றி, உடையின்றி நடைப்பிணங்களாக மாறும் நிலைதான் நாட்டில் ஏற்படும்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா முன்கண்டவாறு எச்சரித்திருக்கிறார்.

சுதந்திரக்கட்சியின் ரத்கம மத்திய கிளையின் ஆதரவில், பூஸாவில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

தற்போது நடைபெற்று வரும் வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற தேவை இன்று அரசாங்கத்திற்கு கிடையாது என்றார் அவர்.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவிக்காகத் தாம் போராடவில்லை என்றும். கூறிய அவர், இன்று தலைமைத்துவத்தைப் பெற வேண்டியவர்கள் பொதுமக்கள் என்றார். [உ-எ]

உ
திருச்சிற்றம்பலம்

## மெய்கண்ட தேவர் ஆதீனம்

இருபதாவது ஆண்டுநிறைவு, விரைவில் கொண்டாடப்படும்

முகவரி:

முதல்வர், மெய்கண்ட தேவர் ஆதீனம்,
5, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.

[19558]

## வலி. வடக்கு ஓய்வூதியர் சங்கம்

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்: **09-02-1992** ஞாயிற்றுக்கிழமை
காலை 9-00 மணி

இடம்: மல்லாகம், இந்து மகா வித்தியாலயம்

அங்கத்தவர்களும், ஓய்வூதியம் பெறுபவர்களும் தவறாது சமுகம் தருக. 1991ஆம் ஆண்டுக்குரிய சந்தா ரூபா 24/- வழங்கிச் சங்க வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வை. பொன்னையா, தலைவர்.
ஜே. எவ். வேதநாயகம், செயலாளர்.

சங்கப்பணிமனை,
காசிப்பிள்ளையார் கோவிலடி,
தெல்லிப்பழை. [19535]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## கார்த்திகேசு இராஜசுந்தரம்

[கைதடியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை-தும்பளையை வதிவிடமாகவும் கொண்டவர்]

மலர்வு: **1956 — 08 — 03**
உதிர்வு: **1992 — 01 — 04**

பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் ஒளிவீசி, குழந்தை உள்ளமாய் பேசி, எங்களையெல்லாம் ஆறாத துயரத்தில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மாமி, மச்சான்மார், மச்சாள்மார்,
உற்றார், உறவினர்கள்.

தேவமாதா வீதி,
தும்பளை, பருத்தித்துறை. [19563]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பண உதவி செல்லுமிடம்

வடக்கு - கிழக்குப் பகுதி கடற்றொழில் அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி இருபது கோடியே இருபது லட்சம் ரூபாவை அரசாங்கத்துக்கு வழங்கியிருக்கிறது. கடனாகக் கிடைத்துள்ள அந்தப் பணத்தை திருகோணமலை மீனவர்களின் நலன்களுக்காகப் பயன்படுத்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது!

திருகோணமலை மாவட்ட மீனவர் என்பது இப்போது சிங்கள மீனவர்களையே குறிக்கும். ஏனெனில் 1990 ஜூன் மாதத்தில் யுத்தம் தொடங்கப்பட்ட ஒரு சில மாதங்களிலேயே, திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர்கள் தங்கள் சொந்த ஊர்களை விட்டு வெளியேறி முல்லைத்தீவுக்கும் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கும் அகதிகளாக வந்து சேர்ந்தனர்.

பல தமிழ்த் தாய்மார்கள் கைக்குழந்தைகளுடனும் மற்றும் வயோதிபர்களும், நோயாளர்களும் கூட, இலைகள், கிழங்குகளை மட்டுமே உண்டும், உண்ணாமலும் பல நாட்களாக, நாற்றுக்கணக்கான மைல்களை நடந்து தங்கள் சொந்த ஊர்களை விட்டு அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

திருமலையில் உட்பிரதேச மக்களுக்கே இந்நிலை ஏற்பட்டது என்றால், கடலை அண்டிய ஊர்களில் வாழ்ந்த மக்களின் - மீனவர்களின் - நிலையை விளக்க வேண்டியதில்லை.

திருகோணமலையில் மட்டுமன்றித் தமிழ்ப் பிரதேசங்கள் முழுவதிலும் அவற்றைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் மீனவர்கள் தொழில் செய்து தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்ள முடியாமல் அரசாங்கப் படைகளின் அட்டகாசம் நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

கடலில் தொழிலுக்குச் செல்வோர் சுட்டுக் கொல்லப்படுவதும், அல்லது கைது செய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்படுவதும், வள்ளம், படகு, வலை போன்ற அவர்களின் தொழில் உபகரணங்கள் நாசமாக்கப்படுவதும் இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இந்த அக்கிரமங்களுக்கு மேலாக, தமிழர் தாயகத்தைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்கள் தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுத் தமிழ் மீனவரின் தொழிலுரிமையும், வாழ்வுரிமையும் பறிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நிற்கவில்லை; தமிழ்ப் பிரதேசத்தின் கடல் வளம் சிங்கள மீனவரின் ஏகபோக சொத்தாக்கப்பட்டுள்ளது; உடைமையாக்கப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, திருமலை மாவட்டத்தில் தமிழ் மீனவர் வாழ்கிறார்கள் என்றோ, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் வாழ்ந்தாலும் கூட, அவர்கள் தொழில் செய்கிறார்கள் என்றோ கொள்வதற்கு இடமில்லை. ஆகையால் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய கடன் பணம் திருமலை மீனவர்களின் நலனுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்றால், அது சிங்கள மீனவரின் நலன்களுக்கென்றே அர்த்தப்படும்!

அபிவிருத்தி வேலைகளுக்கு என்று ஸ்ரீலங்கா அரசின் கை போய்ச் சேரும் பணம் தமிழர்களுக்குச் சிறிதும் சுவறுவதில்லை, தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்கெனக் குறித்து ஒதுக்கப்படும் பணமும் முழுக்க முழுக்க சிங்கள மக்கள் நலன் பேணவே பயன்படுத்தப்படுகிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு நிதியுதவி மற்றும் கடன் வழங்கும் வெளிநாடுகளுக்கும் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் இந்தச் சூட்சுமம் இன்னும் விளங்கவில்லை.

# குறைந்த செலவில் அதிக விளைச்சல்; புதிய பயிர்கள், இனங்கள் அறிமுகம்

## ஆய்வுகளின் பெறுபேறுகளை விளக்க நடக்கும் வயல் விழா

நமது பிரதேசம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும். இந்த இலக்கை அடைவதற்கு பயிர்ச் செய்கை முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதும், விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதும் அவசியமாகும்.

இதனை முன்னெடுத்துச் செல்லும் வகையில் திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தினர் இன்றைய தினம் காலை 9-00 மணிக்கு 'வயல் விழா' ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்விழாவில் உணவு உற்பத்தியை நிர்வகிப்பவர்கள், விநியோகம்- திட்டமிடல் என்பனவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள், விவசாய ஆராய்ச்சியாளர்கள், விரிவாக்க அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து ஆக்க பூர்வமான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வர். அத்துடன் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் முன் வைக்கப்படும்.

பயிர்ச் செய்கையாளர்களுக்கும், இத்துறையில் ஆர்வம் உள்ளோருக்கும் இந்த விழா பெரும் பயனை நல்கும் என்பது உறுதி.

### வளப் பயன்பாடு

எமது மண்ணிலே காணப்படும் இயற்கை வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தி, புதிய இனப் பயிர்களைக் கண்டறிந்து அவற்றிலிருந்து உச்ச விளைவினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற அடிப்படையில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

தற்போது எண்ணெய் வித்துக்கள், சிறுதானிய விதைகள், மரக்கறி விதைகள் பயிரிடப்பட்டு பரீட்சிக்கப்படுகின்றன. இவை முதலில் யாழ். மாவட்டத்திலும் பின்னர் தமிழீழம் எங்கணும் பரப்பப்படும் என எதிர்பார்க்கலாம்.

எமது எண்ணெய்த் தேவைகளை ஓரளவாவது பூர்த்தி செய்ய தாவர எண்ணெய் வகைகளைப் பயன்படுத்த வேண்டிய ஒரு நிலை ஏற்படலாம்.

எனவே, கூடியளவு எண்ணெய் பெறக்கூடிய தாவர வித்துக்களை கண்டறிவது அவசியம். இதன் பொருட்டு ஸ்பெயின் நாட்டு சூரியகாந்தியும், 'ஹஷீரா' இனத்தைச் சேர்ந்த ஆமணக்கும் இங்கு பயிரிடப்பட்டுப் பரீட்சிக்கப்படுகின்றன. அத்துடன் எமது நாட்டுப் பயிரான எள்ளு குறித்தும் 12 வழிகளில் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது.

### புதிய பயிர்கள் அறிமுகம்

மேலும், தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் வெளியிலிருந்து எடுத்து வரப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயிர்களான கம்பு, ஐ. எஸ். 2941 இன இறுங்கு, பத்ரா இன சோளம் மற்றும் கோ-10, கே. எம்-1, பி. எஸ்-20 என்ற இனங்களைச் சேர்ந்த குரக்கன், கோ-5 இன தினை, மற்றும் சாமை, பனுச்சாமை, வரகு, குதிரைவால் பயற்றை என்பன இங்கே பயிரிடப்பட்டுள்ளன.

ரைப்-77 இன பாசிப்பயறு, பம்பாய்க் கௌபி, ரைப்-9 இன உழுந்து ஆகியவை விதைத் தேவைக்கென பயிரிடப்பட்டுள்ளன. அத்துடன் ஐ.சி.பி.எல்.-87, ஐ.சி.பில்-02 வர்க்க துவரைப் பயறு பயிரிடப்பட்டுள்ளதோடு, 12 துவரை வர்க்கங்கள் அவற்றின் பல்வேறுபட்ட பராமரிப்புக் கட்டங்களூடாக உச்ச விளைவைத் தரக்கூடிய முறைகளும் ஆராயப்படுகின்றன.

### குறைந்த செலவில்

யுத்த நிலையை கருத்திற்கொண்டு குறைந்த முதலீடு, செலவுகளுடன் கூடிய விளைவைப் பெற வழிவகைகள் கண்டறியப்படுகின்றன.

விவசாயிகள் தவறான இரசாயனப் பொருள்களைப் பாவிப்பதால் மிளகாய்ச் செடியில் ஏற்படும் குருமன் நோயைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

சீன இனம், கே. ஏ. - 11 இனம் ஆகிய இரு இன மிளகாய்ச் செடிகள், அவை குருமன் நோயைத் தாங்கி உச்ச விளைவைத் தரக்கூடியவையா என்பதைக் கண்டறியும் பொருட்டு பரீட்சிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆராய்ச்சிகளுடன் — பயிர்களில் ஏற்படும் பீடை நோய்களைக் கட்டுப்படுத்தும் புதிய முறைகளைக் கண்டறியும் ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன.

கோவாப் பயிரில் ஏற்படும் 'டயமன் பாக் மொத்' என்ற பூச்சி இனத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய முறைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வுகளின் விளைவுகளையும் அவற்றினால் விவசாயிகள் அடையக்கூடிய நன்மைகளையும் அவர்களுக்கு நேரில் விளக்குவதே இன்று நடைபெறும் 'வயல் விழா' வின் நோக்கமாகும்.

பொருளாதாரம் சிறக்கவும், அதன் மூலம் மக்களின் வாழ்க்கை வசதிகள் மேம்பாடு அடையவும் விவசாயம் பெருக வேண்டும். விவசாயம் பெருகுவதற்கு உள்ளூர் வளங்கள் தக்கவாறு பயன்படுத்தப்படுவதோடு, போர்க் காலச் சூழலுக்கு ஏற்ப புதிய மாற்றீடுகளை அறிமுகப்படுத்துவதும் அவசியம்.

உணவை எமது சுயமுயற்சியால் உண்டாக்கி, உற்பத்தி செய்து, விளைவித்து உண்ண முயல வேண்டும்.

இலமென்று அசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள்
நகும் —

என்ற வள்ளுவன் வாக்கை மறவாது உழைத்து உண்டு உயர்வோமாக. ★

## ராணுவ நடவடிக்கையினால்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும்

யாழ்ப்பாணம், பெப். 3

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், இடம் பெயர்ந்து வசிக்கும் குடும்பங்களுக்கும் ஒருங்கிணைந்த நிவாரணத் திட்டத்தின் கீழ் நன்கொடை, நஷ்டஈடு வழங்குவது பற்றி அறிவிக்கும் பொதுச் சுற்றறிக்கை ஒன்று யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு சமூகநலத்துறை அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட 5/91 இலக்க சுற்றறிக்கையில்;

இடம்பெயர்ந்தவர்களுக்கான, தொழில் இழந்தவர்களுக்கான, வீடு உடைமைகளை இழந்தவர்களுக்கான அனைத்து நன்கொடை கொடுப்பனவுகளும் ஜனவரி மாத இறுதிக்குள் வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1990 ஜூன் மாதத்துக்கு முன்பு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு அதற்கான நன்கொடைகளைப் பெற்றவர்களும், மீண்டும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கும் மீண்டும் நன்கொடை, நஷ்டஈடு வழங்கலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ள போதிலும் யாழ். மாவட்டத்தில் அதைச் செயற்படுத்த தேவையான நிதி எதுவும் இதுவரை ஒதுக்கப்படவில்லை என்றும் —

இராணுவ நடவடிக்கைகளுக்கு உள்ளாகியுள்ள பகுதியில் மீளக்குடியமர்த்துதல், ஒருங்கிணைந்த நிவாரணத் திட்டம் வழங்கல் போன்றனவற்றைச் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்றும் யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (த-5)

## தமிழ்மொழித் தின விழா

மானிப்பாய், பெப். 3

இவ்வாண்டிற்கான தமிழ்மொழித் தின விழா சுவாமி விவேகானந்தர் பிறந்த தினமான எதிர்வரும் ஜூலை மாதம் 19ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவுக் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் பாடசாலை, கோட்டம், மாகாணம் ஆகிய மூன்று நிலைகளில் தேசிய மட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை மட்டத்திலும் —

மார்ச் 5ஆம் திகதிக்கு முன்னர் கோட்ட மட்டத்திலும்—

மே 25ஆம் திகதிக்கு முன்னர் மாகாண மட்டத்திலும் போட்டிகள் நடத்தப்படும்.

போட்டிகள் நான்கு பிரிவுகளாக நடத்தப்படும்.

முதலாம் பிரிவில் 4 ஆம், 5ஆம் ஆண்டுகளும்— இரண்டாம் பிரிவில் 6, 7, 8, ஆம் ஆண்டுகளும், மூன்றாம் பிரிவில் 9, 10, 11 ஆம் ஆண்டுகளும், நான்காம் பிரிவில் 12, 13 ஆம் ஆண்டுகளும், அடங்கும். [த-எ-90]

## கிராம சேவையாளர்கள் எண்மர் வவுனியாவில் திடீர் இடமாற்றம்

கொழும்பு, பெப். 3

வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 8 கிராம சேவையாளர்கள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றங்களை இரத்துச் செய்யும்படி வவுனியா மாவட்ட எம்.பியும் கல்வி ராஜாங்க அமைச்சருமான திருமதி இராஜமனோகரி புலேந்திரன் வவுனியா அரச அதிபருக்கு கோரிக்கை விடுத்ததாகவும் —

ஆனால் இடமாற்றங்கள் [illegible] கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரணம் வழங்க கோரிக்கை

யாழ். கரையோரப் பகுதி மீனவர் கிராமங்களில் வசிக்கும் பாதிக்கப்பட்ட சிகை அலங்கரிப்பாளர் குடும்பங்களுக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்க வேண்டும்.

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை, யாழ். அரசாங்க அதிபர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கு சமர்ப்பித்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். [த-51]

## துலா மூலம் நீர் இறைப்பு

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். மாவட்டத்தில் துலா மூலம் நீரிறைக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான திட்டமொன்றை தமிழீழ ஆய்வு நிறுவனம் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாகச் செயற்படுத்தி வருகின்றது.

கீரிமலைப் பிரதேசத்தில் மட்டும் 115 துலாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 75 துலாக்கள் வரை அமைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. பல இடங்களில் விவசாயிகள் உற்சாகமுடன் துலா அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. [த]

## அரச ஊழியர் இடமாற்றம்

கொழும்பு, பெப். 3

அரச ஊழியர்களின் இடமாற்ற விஷயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலையிடக்கூடாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியேந்திரா, ஜெகநாதன் ஆகியோரின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு, கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்திய இராணுவத்தின் அத்துமீறலுக்கு எதிராக 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி மாணவர்கள் நடத்திய அகிம்சைப் போராட்டத்தின் போது இவ்விருவரும் தம்முயிரை ஈந்தனர்.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் சகல பல்கலைக்கழக மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு மாணவரவை கேட்டுள்ளது. [ஒ]

# ரோஹணவின் குடும்பத்தை லண்டன் அனுப்ப கோரிக்கை

ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜேவீரவின் மனைவியையும் பிள்ளைகளையும் லண்டனுக்கு அனுப்பி வைக்குமாறு ஜே.வி.பி. லண்டன் கிளை ஸ்ரீலங்கா அரசைக் கேட்டிருக்கிறது.

ஆனால் அவர்கள் தொடர்ந்து தமது பாதுகாப்பில் இருப்பதையே கூட்டுப்படைத் தலைமையகம் விரும்புவதாக கூட்டுப் படைத் தளகர்த்தர் லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார்.

[உ-10]

## சமஷ்டி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லேயே 13 ஆவது திருத்தம் மூலம் அரசமைப்பில் இடம்பெறச் செய்யப்பட்டிருக்கின்றன.

அதன் வழி முழுவதையும் வழங்கி, உரிய முறையில் அதைப் பெயரிட்டு அழைப்பதுதான் எஞ்சியிருக்கிறது— என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

# மரண அறிவித்தல்கள்

## இராஜரெத்தினம் சோமசுந்தரம்

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற இராஜரெத்தினம் வள்ளியம்மை ஆகியோரின் மகன் சோமசுந்தரம் (சின்னராசா) காலமாகி விட்டார்.

இவர் பவளமலரின் அன்புக் கணவரும், சதீஸ்குமார், ரேகா, அனுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரராஜசிங்கம், அன்னலட்சுமியின் இளைய மருமகனும், பாலசுப்பிரமணியம், தனபாலசிங்கம், தியாகராஜா, நாகேஸ்வரி, கனகலக்ஷ்மி, சறோஜினி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரகுநாதன், யோகலிங்கம், வாசன், இராஜபூமளம், லக்ஷ்மி, கோமதி, ஸ்ரீஸ்கந்தராசா (தாவடி), நவரத்தினராஜா, அருந்தவமலர், காலஞ்சென்ற யோகராஜா, மனோகரன், சவுந்தரராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (03-02-1992) காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
பரராஜசிங்கம்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

[19577]

### திருமதி
## வினாசித்தம்பி சிவகாமிப்பிள்ளை

திருமதி வினாசித்தம்பி சிவகாமிப்பிள்ளை 1-2-92 அன்று காலமானார். இவர் மிருசுவில் உசனைச் சேர்ந்த வினாசித்தம்பியின் அன்பு மனைவியும், நிர்மலாதேவி, நித்தியானந்தன் (கனடா), கருணானந்தன் (கனடா), சிவானந்தி (கனடா), சயந்தாதேவி ஆகியோரின்அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம் (கனடா). பரஞ்சோதி[கனடா], சாரதாதேவி [கனடா], லோஜினி [கனடா], சிவபாதசுந்தரம் [யாழ். பல்கலைக்கழக பௌதீகபீடம்] ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌசிகன், நிரோசன், பிரகாலினி, நிரோஷாந்தி, யஸ்பினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பேரம்பலம் [இளைப்பாறிய சங்கீத ஆசிரியர்], சரஸ்வதி [கைதடி] ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று [2-2-1992] பிற்பகல் 2 மணிக்கு ஈச்சங்காடு மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. வினாசித்தம்பி
[கணவன்]

உசன், மிருசுவில்.

[19576]

## அந்தோனிப்பிள்ளை செல்லத்துரை

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மன்னாரில் வசித்தவருமாகிய அந்தோனிப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் காலமாகிவிட்டார். இவர் அன்னம் அவர்களின் அன்புக் கணவரும் L. E. இராசநாயகம் [ஜெயம்] [ஆசிரியை திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை, யாழ்ப்பாணம்], ஜெபரெட்ணம் [சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மன்னார்], ஹெலன், அன்ரன் (முன்னாள் அன்ரன் சொப் உரிமையாளர், மன்னார்], வின்சன் [அவுஸ்திரேலியா], யோசவ் [விவசாய இலாகா, மன்னார்], ஸ்ரீபன் [அவுஸ்திரேலியா], பேக்மன் [நோர்வே], றஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் J. E. இராசநாயகம் [தொழில்நுட்ப உத்தியோகத்தர் கமநல சேவை திணைக்களம், மன்னார்], அரியமலர் [அரசினர் வைத்தியசாலை, மன்னார்], B. அந்தோனிப்பிள்ளை [S. I. இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார்], விக்ரோறியா, சாமினி [அவுஸ்திரேலியா], இரத்தினம், நீரா [நோர்வே], M. அன்ரன் அல்பிறெட் [ஆசிரியர், புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, மன்னார்] ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை பி. ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் இல. 40, மாட்டீன் லேன் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக யாழ். பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
J. E. இராசநாயகம்

40, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,

[19581]

## ஐந்து..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பதில் எதிர்க்கட்சித் தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான அனுரா பண்டாரநாயக்கா தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதமரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான டி.பி. விஜேதுங்கா, அமைச்சர்கள் எஸ். தொண்டமான், ரணில் விக்கிரமசிங்க, சிறிசேன குரே ஆகியோர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட இருக்கும் ஐவரில் அடங்கக் கூடும் என்று அரசியல் அவதானிகள் ஊகம் தெரிவித்தனர்.

[உ-10]

## ஆஸ்பத்திரி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெளியிட்டிருந்தது. அதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட தரப்புகளின் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, நாளை முதல் மீண்டும் மலசலக்கழிவு பண்ணைக் கடலுக்குள் பாய்ச்சப்பட உள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து மலசல கழிவுகள் செல்லும் வடிகால் பாதை கடந்த சில தினங்களாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் மேற்பார்வையில் துப்புரவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அப்பாதை ஊடாக ஆஸ்பத்திரியில் இருந்து பரீட்சார்த்தமாக தண்ணீர் மட்டும் பாய்ச்சப்பட்டது. அது வெற்றி அளித்ததைத் தொடர்ந்து, நாளை முதல் மலசலக் கழிவும் பண்ணைக்குப் பாய்ச்சப்பட உள்ளது.

ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறும் கழிவுகளை பண்ணையில் அமைந்துள்ள பாரிய தேங்கு குழிகளில் நிரப்பி, அவற்றை அங்கிருந்து ''பம்ப்'' மூலம் கடலில் சேர்ப்பிக்க தற்காலிக ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

நாளை முதல் ஆஸ்பத்திரியில் சேரும் மலசல கழிவு, வடிகால் மூலம் பண்ணையில் உள்ள தேங்கு குழிகளில் சேர்க்கப்படும். அவை மறுநாள் முதல் ''பம்ப்'' மூலம் கடலுக்குள் பாய்ச்சப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மலசல கழிவு அகற்றும் வேலை நடக்கும் பகுதியை தாக்குதல் நிறுத்தப்பட்ட பிரதேசமாக்குவதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த உள்ளது. [அ-3]

## அரசாங்கப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தரம் குறைந்தவையாகவும், இயந்திரக் கோளாறு போன்ற காரணங்களினால் பயன்படுத்த முடியாமல் இருப்பனவாக உள்ளதாகவும் அதே செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இவற்றின் விளைவாக, போரைத் திறமையாகவும், வெற்றி தரக்கூடியதாகவும் நடத்த முடியுமா என்ற சந்தேகம் உருவாகி வருவதாகவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

அரசு மனித உரிமை மீறலில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டி மேற்கத்திய நாடுகள் இலங்கைக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதைத் தடை செய்திருப்பதால் இலங்கை சீன ஆயுதங்களையே பெருமளவில் நம்பியிருக்க வேண்டி இருப்பதாகவும் மேலும் சுட்டிக் காட்டப்பட்டது. [அ-ஒ-எ]

## 'பாஜ்'கள்..

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பலில் வந்து சேர்ந்துள்ளன.

இவை திருத்தப்பட்ட பின் பொருள்கள் இறக்கும் வேலை [illegible] வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஒ-3]

## நாளை மறுதினம்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

லூரியில் ஒன்று கூடி அங்கிருந்து பேரணியை ஆரம்பிப்பர்.

வடமராட்சி மற்றும் கோப்பாய், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கல்வியங்காட்டிலிருந்து தமது பேரணியைத் தொடங்குவர்.

இந்தப் பேரணிகளும், தீவக மக்கள் சத்திரத்துச் சந்தியிலிருந்து ஆரம்பிக்கும் பேரணியும் நல்லூர் ஆலய முன்றலை காலை 9-30 மணியளவில் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேரணிகள் அங்கு ஒன்றிணைந்து கோவில் வீதி வழியாக யாழ். செயலகத்தை நோக்கிச் செல்லும். வழியில் கோவில் வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தில் வைத்து, குழுவின் பிரதிநிதிகளிடம், பேரணியில் பங்குபற்றும் மக்களின் சார்பில் மகஜர் ஒன்று கையளிக்கப்படும்.

யாழ். செயலகத்தைப் பேரணி சென்றடைந்ததும் அதில் சென்ற மக்கள் மறியல் போராட்டத்தில் இணைந்து கொள்வர்.

இதேசமயம்—

தென்மராட்சிப் பகுதியில் இருந்து வரும் மக்கள் அரியாலை தபால்கட்டை சந்தியில் ஒன்றுகூடி அங்கிருந்து பேரணியாக— கண்டி வீதியூடாக—செயலகத்தை அடைவர்.

யாழ். கரையோரப்பகுதிகளான பாஷையூர், கொழும்புத்துறை, குருநகர், நாவாந்துறை ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள் யாழ். சேமக்காலைச் சந்தி பகுதியில் ஒன்று கூடி பேரணியாக செயலகத்தை அடைவர்.

நண்பகலளவில் யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதுடன், மறியல் போராட்டம் முடிவடையும்.

போராட்டம் நடைபெறும் நாளை மறுதினம் பாடசாலைகள் யாவும் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெகுஜனப் போராட்டம் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராய யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் இன்று கூடுகிறார்கள். [உ-3]

## கூடுதலான..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாடுகள் மனித உரிமை மீறல்களையும் நிதி உதவி வழங்குவதையும் தொடர்பு படுத்தியே விண்ணப்பத்தை ஆராய வேண்டும் என வற்புறுத்தும் எனச் சொல்லப்படுகிறது.

கொக்கட்டிச்சோலை படுகொலை விசாரணைக் குழு அறிக்கையும் இம்முறை முக்கிய இடத்தைப் பிடிக்கும் எனவும் அறிய வருகிறது.

எனினும் உலக வங்கியும் சர்வதேச நாணய சபையும் எதிர்பார்க்கும் பொருளாதார வளர்ச்சியை ஸ்ரீலங்கா பூர்த்தி செய்திருக்கிறதா என்பதைக் கூட்டு மொத்தமாக அவதானித்தே—அதனைப் பிரதான அம்சமாகக் கருதியே—அதன் அடிப்படையிலேயே—நிதி வழங்கப்படுவதுண்டு.

அந்த வகையில் ஸ்ரீலங்காவுக்கு அது எதிர்பார்ப்பதை விடக் கூடுதல் நிதி உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ-10)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா பொன்னையா

மல்லாகம் வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த திருமதி சின்னம்மா பொன்னையா 2 2-1992 அன்று காலமானார்.

இவா பொன்னையாவின் அன்பு மனைவியும், காலம்சென்ற தியாகராசா, சாந்தநாயகி, காலஞ்சென்ற நித்தியானந்தசிவம், யோகநாயகி [லண்டன்]. யோகேஸ்வரன் [ஜேர்மனி], கனகநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், சறோஜினிதேவி, சுந்தரலிங்கம், காலம்சென்ற ஜெயலட்சுமி, வெற்றிவேல் [லண்டன்], பாக்கியலட்சுமி [ஜேர்மனி], ஜெகநாதன் [மஸ்கன் கம்பனி] ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம்சென்ற இராமசாமி, காலம்சென்ற பொன்னம்மா, காலம்சென்ற அன்னம்மா, இராசம்மா, காலம்சென்ற நாகம்மா, காலம்சென்ற மாணிக்கம், இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும். கிரிசா, முருகன், கீதா, முகுந்தன், கேசவரூபன் [சுவிஸ்], சிவரூபி. நவரூபி, கனித்தா [லண்டன்], பிரணவன் [ஜேர்மனி], பிரதீபன் [ஜேர்மனி], சுஜேந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-2-1992 இன்று நண்பகல் 12 மணியளவில் மல்லாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, மல்லாகம் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோவிலடி,
மல்லாகம்.
(19582)

தகவல்:
சு. சுந்தரலிங்கம்
[லிங்கம்]

## திருமதி யோகேஸ்வரி சுப்பிரமணியம்

நயினாதீவு 2 ஆம் வட்டாரம் யோகேஸ்வரி சுப்பிரமணியம் நயினாதீவில் 1-2-92 இல் காலமானார். இவர் வைத்திலிங்கம் சுப்பிரமணியத்தின் (கிளி) (தபாலகம் நயினாதீவு) அன்பு மனைவியும். செல்வன் சிவகுமார், செல்வி உஷாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலம்சென்றவர்களான இராமச்சந்திரன், மங்களேஸ்வரி ஆகியோரின் மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், தங்கமுத்து ஆகியோரின் மருமகளுமாவார். இறுதிக் கிரியைகள் 3-2-92 இன்று நயினாதீவில் நடைபெறும்.

தகவல்:
வை. சுப்பிரமணியம் (கிளி) கணவன்
நா. கோபாலகிருஷ்ணன் மாமனார்

194 A காரைநகர் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

[19583]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 3-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org